நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஊகவணிகத்தில் மக்காச் சோளம்: விவசாயிகள் புதிய முயற்சி**

First Published : 26 Nov 2010 04:45:35 AM IST




திட்டக்குடி வட்டம் கீழக்கல்பூண்டி கிராமத்தில் பூக்கத் தொடங்கி இருக்கும் மக்காச்சோளம். (வலது படம்) கீழக்கல்பூண்டி கிராமத்தில் அண்மையில் நடந்த விளக்கக்

கடலூர், நவ. 25: ஊகவணிகத்தின் மூலம், மக்காச்சோளத்துக்கு நியாயமான விலை கிடைக்க கடலூர்
மாவட்ட விவசாயிகள் முயற்சி மேற்கொண்டு உள்ளனர்.

÷தமிழ்நாட்டில் 2 லட்சம் ஹெக்டேரில் மக்காச்சோளம் விளைவிக்கப்படுகிறது. இதில் இருந்து கிடைக்கும் மக்காச்சோளம், தமிழ்நாட்டின் ஆண்டுத் தேவையில் 50 சதவீதத்தை மட்டுமே பூர்த்தி செய்கிறது.

÷எனவே வெளி மாநிலங்களில் இருந்து மக்காச்சோளம் கொள்முதல் செய்யப்படுகிறது. எனினும் தமிழகத்தில் விளையும் மக்காச்சோளத்துக்கு, நியாயமான விலை கிடைப்பது இல்லை என்கிறார்கள்
விவசாயிகள்.

÷கடலூர் மாவட்டம் மங்களூர், நல்லூர் ஒன்றியங்களில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. இந்த ஆண்டு 14,300 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு உள்ளது.

÷மக்காச்சோள விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு, அதிகபட்சவிலையாக குவிண்டாலுக்கு ரூ.800 மட்டுமே கிடைத்ததாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

÷மக்காச்சோள வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனை நிலையங்களில், சிண்டிகேட் கூட்டணி அமைத்துக் கொண்டு, மக்காச்சோள விலையை குறைத்துவிடுவதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷இந்நிலையைப் போக்க ஊகவணிகம் மூலம் மக்காச்சோளத்தை விற்பனை செய்ய கடலூர் மாவட்ட

விவசாயிகள் புதிய முயற்சி மேற்கொண்டு உள்ளனர்.
தமிழகத்தில் மஞ்சள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் இந்த முறையைப் பின்பற்றியதால், கடந்த 3 ஆண்டுகளாக அவர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை, முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு
மக்காச்சோள விவசாயிகள் இந்த முயற்சியில் இறங்கி இருப்பதாக, கடலூர் மாவட்ட விவசாயிகள் கூறுகிறார்கள்.
÷ஊகவணிகத்தை மேற்கொள்ளும் என்.சி.டி.இ.எக்ஸ். (National Commodity Derivative Exchange LTD) என்ற நிறுவனத்தை விவசாயிகள் தொடர்பு
கொண்டதன் விளைவாக, அந்த நிறுவனத்தினர் கடந்த திங்கள்கிழமை கடலூர் மாவட்டத்துக்கு வருகை தந்து, விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.
÷இக்கூட்டம் திட்டக்குடி வட்டம் கீழக்கல்பூண்டி கிராமத்தில் நடந்தது. ஊகவணிக நிறுவனத்தின் தலைமை அமைப்பாளர் உமா மதன், மக்காச்சோளப் பிரிவு தென்னிந்திய மேலாளர் ரமேஷ் சந்த், விருத்தாசலம் வேளாண் விற்பனை துறை உதவி அலுவலர் அமுதா உள்ளிட்டோர் கலந்து கொண்டு
விளக்கங்களை அளித்தனர்.
÷இது குறித்து மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில்,
"தமிழகத்தில் விளைச்சலைவிட மக்காச்சோளத் தேவை அதிகமாக உள்ளது.
கடந்த ஆண்டு மக்காச்சோளத்துக்கு குவிண்டாலுக்கு ரூ.ஆயிரம் வரை கிடைத்து இருக்க வேண்டும்.
ஆனால் ரூ.800தான் கிடைத்தது.
÷மஞ்சள் விவசாயிகளிடமும் வியாபாரிகள் இதே முறையைப் பின்பற்றியதால், மஞ்சள் விவசாயிகள்
நியாயமான விலை கிடைக்காமல் அவதிப்பட்டனர்.
கடந்த 3 ஆண்டுகளாக ஊகவணிகத்தின் மூலம், மஞ்சள் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கிறது. அதன் அடிப்படையில் மக்காச்சோளத்திலும் ஊகவணிகத்தின் மூலம், விவசாயிகளுக்கு
நியாயமான விலை கிடைக்க, முயற்சி செய்கிறோம்.
÷இந்த முறையில் மக்காச்சோளத்தை விற்பனை செய்ய, விவசாயிகளுக்கு சேமிப்புக் கிடங்கு வசதிகள்
தேவைப்படும். இந்த ஆண்டு இருக்கும் வசதிகளைப் பயன்படுத்துவோம்.
÷எங்கள் முயற்சி வெற்றி பெற்றால் வரும் ஆண்டுகளில் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க

தமிழக அரசை வற்புறுத்துவோம்' என்றார்.

÷நிகழ்ச்சியில், மாவட்ட அனைத்து விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பின் மாவட்ட பொதுச் செயலர்

கார்மாங்குடி வெங்கடேசன், உழவர் மன்றங்களின் நிர்வாகிகள் வேணுகோபால், ஏ.கே.ரவிச்சந்திரன்,

எல்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் சம்பா நெல் விளைச்சல் அமோகம்**

First Published : 26 Nov 2010 04:42:55 AM IST



காஞ்சிபுரம், நவ. 25: காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான சம்பா நெல் விளைச்சல் அமோகமாக உள்ளது. அதேபோல் விலையும் நெல், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.900-ல் இருந்து ரூ.1100

வரை விற்பனை செய்யப்படுகிறது.

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஆண்டுதோறும் 1,45,966 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது தொழிற்சாலைகள் பெருக்கம், ரியல் எஸ்டேட்

வியாபாரம் என பல ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்களில் உற்பத்தி குறைந்துள்ளன.

÷தற்போதும் 1 லட்சத்து 25 ஆயிரம் ஹெக்டேரில் விவசாயம் நடைபெற்று வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதில் சம்பா பருவத்தில் விவசாயிகள் 30-40 சதவீதம் நெல் விளைச்சல் செய்கின்றனர்.

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த சம்பா பருவத்தில் நெற்பயிர்கள் நன்றாக வளர்ந்துள்ளன. அரசு விற்பனைக் கூடங்களில் சன்னரகம் நெல், குவிண்டாலுக்கு ரூ.1100-ம், குண்டுரகம் ரூ.950-ல் இருந்து

ரூ.ஆயிரமும் விலை கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மழை

நேரத்தில் அறுவடைக்கு காத்திருந்த நெற்பயிர்கள் மழையில் சிக்கி சேதமடைந்தன. ஆனாலும் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்கள் நன்றாக உள்ளன.

÷இது குறித்து இயற்கை விவசாயிகள் சங்கத்தின் தலைவர் அருங்குன்றம் தேவராஜிடம் கேட்டபோது:

"சம்பா பருவத்தில் மாவட்டத்தின் ஓர் ஆண்டுக்கான மொத்த நெல் உற்பத்தியில் 30 சதவீதம்தான் உற்பத்தியாகும். குறைந்த உற்பத்தி காரணமாக நெல் விலை நன்றாக உள்ளது. ÷இருந்தாலும் இந்த

நேரத்தில் கூட சில தனியார் நெல் விலையை குறைத்துதான் வாங்குகின்றனர். அரசு விற்பனைக் கூடங்களில் விற்பனையில் ஏற்படும் காலதாமதம், மறைமுகமாக ஒரு சிலர் கேட்கும் பணம், ஏற்கெனவே சில விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் விவசாயத்துக்கு முன் பணம் வாங்கிவிடுதல் ஆகிய காரணங்களால்தான் தனியாரிடம் செல்கின்றனர்.

÷அரசு விற்பனைக் கூடங்களில் இருக்கும் பிரச்னைகளை சரி செய்து, விவசாயத்துக்கு தடையில்லாமல் கடன் கிடைத்தால் தனியாரிடம் செல்லும் நிர்பந்தம் விவசாயிகளுக்கு ஏற்படாது. வரும் நவரை பருவத்தில் அதிக நெல் விளைச்சல் இருக்கும். அப்போது விலை சரியாமல் இருந்தால்தான் பெரும்பாலான விவசாயிகள் லாபம் அடைய முடியும். அதிக நெல் விளைச்சல் இருக்கும்போது பெரும்பாலும் விலையை குறைத்து விடுகின்றனர்' என்றார்.

**"இயற்கை விவசாயத்தை அரசு ஊக்குவிக்க வேண்டும்'**

First Published : 26 Nov 2010 04:42:09 AM IST



நீர்வள ஆதாரங்கள் குறித்த பாதுகாப்பு கருத்தரங்கில் பேசுகிறார் மனித உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பு பொதுச் செயலர் தென்பாண்டியன்.

திருவள்ளூர், நவ 25: இயற்கை விவசாயத்தை அரசு ஊக்குவிக்க வேண்டும் என திருவள்ளூரில் நடைபெற்ற நீர்வள ஆதாரங்கள் குறித்த பாதுகாப்பு கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

÷திருவள்ளூரில் நதிகள் பாதுகாப்புக் கூட்டமைப்பு மற்றும் சமூக செயல்பாடுகளின் இயக்கம் சார்பில்

நீர்வள ஆதாரங்கள் குறித்த பாதுகாப்பு கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது. இக்

கருத்தரங்கிற்கு நதிகள் பாதுகாப்பு கூட்டமைப்பின் மாநிலக் குழு உறுப்பினர் மூர்த்தி தலைமை வகித்தார். வெளிச்சம் அறக்கட்டளை நிறுவனர் சீனிவாசன் வரவேற்றார். மனித உரிமைக்கான மக்கள்
கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் தென்பாண்டியன் முன்னிலை வகித்தார்.

÷இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தமிழக அரசு இயற்றியுள்ள குளங்கள், ஏரிகள் பாதுகாப்பு
சட்டத்தை உண்மையான பொருளில் அமல்படுத்த வேண்டும். வேலை உத்தரவாத திட்டத்தின் கீழ் ஏரிகளை தூர்வாரும் பணி மற்றும் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சியால் பாதிக்கப்பட்ட ஏரிகளை மீட்டெடுக்கவும், புனரமைக்கவும், ஆக்கிரமிப்புகளை
அகற்றுவதோடு, கழிவுகளை ஏரிகளில் கொட்டுவதைத் தடுக்க வேண்டும்.

÷விவசாயத்தில் பயன்படுத்தப்படும் நச்சுப்பொருள்கள் பெரும் அபாயமாக மாறியுள்ளன. எனவே வேதிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்திற்கு மாறாக இயற்கை விவசாயத்தை
அரசு ஊக்குவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மக்காச்சோளம் மகசூல் அதிகரிக்க ...**

எஸ். சபேஷ்

First Published : 25 Nov 2010 01:41:35 PM IST

அரக்கோணம்: மக்காச்சோளம் விவசாயத்தில் மகசூல் அதிகரிக்க தற்போது சூழ்நிலைகள் சாதகமாக இருப்பதால் விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிடுவதில் கவனம் செலுத்த வேண்டும் என வேளாண்மை அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

மக்காச்சோளம் தமிழகத்தில் சுமார் 2 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பருவமழை குறைந்த இடங்களில் அதிகநீர் தேவைப்படும் நெல் பயிருக்கு பதிலாக மாற்று பயிராக மக்காச்சோளம் சாகுபடி செய்யலாம்.

மக்காச்சோளம் உற்பத்தி திறனை பார்க்கும்போது தற்போது சராசரியாக ஹெக்டேருக்கு 1,500 கிலோ அளவில் மகசூல் கிடைக்கிறது. 2009-10 ஆண்டில் மக்காச்சோளம் சாகுபடி 3 லட்சம் ஹெக்டேருக்கு அதிகரிக்கவும், உற்பத்தியை ஹெக்டேருக்கு 5ஆயிரம் கிலோ அளவில் அதிகரிக்கவும் வேளாண்மை துறை பல்வேறு மானிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

ஏரிப்பாசன பகுதி (நஞ்செய்) விவசாயிகளுக்கு ரூ. 4 ஆயிரம் மானியத்தில் ஒரு ஹெக்டோர் பயிரிட விதை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன. வரும் தை பட்டமான ஜனவரி-பிப்ரவரி மக்காச்சோளம் சாகுபடிக்கு உகந்த காலம்.

கோ 1, கோ எச் (எம்) 5 ஆகிய ரகங்கள் பயிரிட ஏற்றவை. ஒரு ஹெக்டேருக்கு வீரிய ஒட்டு ரகங்கள் ஹெக்டேருக்கு 15 கிலோ கிராம் இடலாம்.

குருத்து ஈ, தண்டுபுழு போன்ற பூசசிகளை கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 4 மில்லி குளோரிபைரிபாஸ் (அ) மானோ குரோட்டோபாஸ் (அ) பாசலோன் மருந்து கலக்கலாம்.

அடிச்சாம்பல் நோயை கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் திரம் (அ) கார்பன்டைசிம் கலக்கலாம். நுண்ணுயிர் நேர்த்திக்கு ஒரு கிலோ விதைக்கு 200 கிராம் கொண்ட பாக்கெட் அசோஸ்பைரில்லம் கலந்து 24 மணி நேரத்திற்குள் விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 5 டன் தொழுஉரம் இட்டு நன்கு உழவுமேற்கொள்ள வேண்டும்.

மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரமிட வேண்டும் அல்லது ஏக்கருக்கு 54:25:20 கிலோ முறையில் தழை, மணி, சாம்பல் சத்து இடவேண்டும். இதில் அடியுரமாக ஏக்கருக்கு முறையே 13.5:25:20 கிலோ தழை மணி சாம்பல் சத்து இடவேண்டும்.

நடவு வயலில் ஏக்கருக்கு 4 பாக்கெட் (800 கிராம்) அசோஸ்பைரில்லம், 4 பாக்கெட் (800 கிராம்) பாஸ்போபேக்டிரியா நுண்ணுயிர் உரத்தை நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து சீராக தூவ வேண்டும்.

ஏக்கருக்கு 5 கிலோ சிறுதானிய நுண்ணூட்டச் சத்து உரத்தை மணல் (அ) மக்கிய தொழு உரத்துடன் கலந்து விதைக்க வேண்டும்.

பயிருக்கு பயிர் 20 செ. மீட்டரும், வரிசைக்கு வரிசை 60 செ. மீட்டரும் அதாவது ச.மீட்டரில் 8 செடிகள் அதாவது ஒரு ஏக்கரில் 32 ஆயிரம் செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும்.

முதல் மேலுரமாக விதைத்த 25-வது நாள் ஏக்கருக்கு 27 கிலோ தழைச்சத்து இட வேண்டும். பின்பு இரண்டாம் மேலுரமாக விதைத்த 45-வது நாள் 13.5 கிலோ தழைசத்து இட வேண்டும்.

விதைத்த 30-ம் நாள் ஏக்கருக்கு 5 எண்கள் கருவாட்டுபொறி வைத்து குருத்து ஈயை கட்டுப்படுத்தலாம். இரவு நேரங்களில் விளக்குப்பொறி வைத்தும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். பாதிப்பு ஏற்பட்ட செடிகளை களைந்து எரித்து விட வேண்டும்.

இந்த ஆலோசனைகளை கடைபிடித்தால் ஏக்கருக்கு ரூ. 4ஆயிரம் செலவு ஏற்படும். வருவாய் ரூ.12 ஆயிரம் கிடைக்கும்.

இதுகுறித்த விவரங்கள் தேவைப்படுவோர் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள வேளாண்மை அலுவலகங்களை அணுகலாம் என வேளாண்துறை காவேரிபாக்கம் உதவி இயக்குநர் வெ.ஜெயச்சந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் திருக்குமரன் ஆகியோர் தெரிவித்தனர்.

**பண்ணை செழிக்க மண்ணைக் காப்போம்!**

First Published : 25 Nov 2010 10:59:09 AM IST

திருநெல்வேலி, நவ. 24: பண்ணை செழிக்க வேண்டுமானால் மண்ணைப் பாதுகாப்பது அவசியம். மண்ணின் வளமே மனித வளம். நாம் சாகுபடி செய்யும் மண், எண்ணற்ற நுண்ணுயிரிகளையும் நன்மை செய்யும் பல பாக்டீரியாக்களையும் கொண்ட உயிருட்டமுள்ளதாகும்.

உயிரூட்டப்பட்ட மண்ணில்தான் அதிக பயிர் மகசூல் பெற முடியும். நம் முன்னோர்கள் அதிக அளவு இயற்கை உரங்களான தொழு உரம், பசுந்தாள் உரம், போன்றவற்றைப்பயன்படுத்தினர்.

இதனால் மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் பெருக்கம் அதிகரித்து அம் மண் உயிரோட்டமுள்ள மண்ணாக இருந்தது. ஆனால் இப்போது நாம் ஆடு, மாடுகள் வளர்ப்பதைக் குறைத்துக் கொண்டு இயற்கை உரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ரசாயன உரங்களை மட்டும் நம்பி விவசாயம் செய்து வருகிறோம். இதன் தொடர்ச்சியாக மண்ணின் வளம் குறைந்து மண் ஒரு ஜடப் பொருளாக மாறிவிடும் அபாயம் உள்ளது.

இயற்கை உரங்களும் ரசாயன உரங்களும் வண்டிக்கு ஒரு சக்கரம் போன்றவை. நாம் இடுகின்ற இந்த உரமானது தண்ணீரில் கரைந்து மண்ணில் ஒட்டிக் கொள்ளும். மண்ணுடன் கலந்த சத்துக்கள் நுண்ணுயிர்களால் சிதைக்கப்பட்டு, அதன்பிறகே பயிர்கள் எடுத்து கொள்ளும் நிலைக்கு மாறுகிறது.மண்ணில் நுண்ணுயிரிகள் அதிகமாக இருந்தால்தான் நாம் இடும் உரத்திற்கு முழுப் பலன் உண்டு. மண்ணில் நுண்ணுயிரிகள் குறையும்போது எவ்வளவு உரமிட்டாலும் அந்த உரம் பயனளிக்காமல் போய் விடும்.

மண்ணில் நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் மற்றும் பாக்டீரியாக்களை ஆராய்ந்து அவற்றை சோதனை கூடங்களில் உற்பத்தி செய்து அவை உயிர்வாழ்வதற்கு ஒரு சேர்மானப் பொருளையும் உற்பத்தி செய்து அதற்கு உயிரி உரங்கள் எனப் பெயரிட்டு வேளாண் விற்பனை மையங்கள் மூலமாக மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

தழைச்சத்து கொடுக்கக்கூடிய உயிரிஉரங்கள் அசோஸ்பைரில்லம்- பயறு வகை பயிர்களைத் தவிர அனைத்து பயிர்களுக்கும், ரைசோபியம்-பயறு பயிர்களுக்கு) மணிச்சத்து கொடுக்கக்கூடிய உயிரி உரங்கள் (பாஸ்போ பாக்டீரியா-அனைத்து பயிர்களுக்கும்) என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

உயிரி உரங்களைப் பயன்படுத்தும் முறைகள்:

விதையில் கலந்து இவற்றைப் பயன்படுத்தலாம். நேரடியாகவும்மண்ணில் இடலாம். மண்ணில் உயிரிஉரங்களைத் தொடர்ந்து இட்டு வந்தால் நாம் இடும் ரசாயன உரங்களின் அளவை 20 சதம் வரை குறைத்து விடலாம்.

மணிச்சத்து உயிரி உரம் இடுவதால் வேர் வளர்ச்சி அதிகமாகி பயிர் வறட்சியைத் தாங்கி வளரும். மேலும் மண்ணில் கிட்டா நிலையில் உள்ள மணிச்சத்தைக் கரைத்து பயிர் எளிதில் எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைக்கு ஏதுவாகிறது.

தழைச்சத்து உயிரி உரம் இடுவதால் நுண்ணுயிர்கள் காற்றிலுள்ள தழைத்சத்துகளை மண்ணில் நிலைப்படுத்தி பயிர் எடுத்துக்கொள்ள ஏதுவாகிறது.

உயிரி உரங்கள் இடுவதால் மண்வளம் அதிகமாவதுடன் பயிர் மகசூலும் அதிகரிக்கும். மேலும் பயிருக்கு பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகிறது.

உயிரி உரங்கள் அனைத்தும் பாளையங்கோட்டை, திருநெல்வேலி சந்திப்பு, முன்னீர்பள்ளம் மற்றும் சிவந்திப்பட்டி வேளாண் விரிவாக்க மையங்களில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என வேளாண் உதவி இயக்குநர் மு. வெள்ளைப்பாண்டி தெரிவித்துள்ளார்.

**வேளாண் காப்பீட்டு திட்டத்தில் பயன்பெற அழைப்பு**

First Published : 25 Nov 2010 01:27:00 PM IST

பாபநாசம்,நவ. 24: சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்ய பயிர்க் காப்பீடு செய்யக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாபநாசம் வேளாண் உதவி இயக்குநர் கே. விஜயகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பாபநாசம் வட்டார விவசாயிகள் இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பாதிப்பை ஈடு செய்ய தங்களது பயிர்களை காப்பீடு செய்து கொள்ள வேண்டும்,

இத்திட்டத்தில் விவசாயிகள் பயன் பெற அருகிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்க வேண்டும்.

வங்கியில் கடன் பெறும் விவசாயிகள் 31.12.2010-க்குள்ளும், கடன் பெறா விவசாயிகள் 15.12.2010-க்குள்ளும் பிரிமியத் தொகையைச் செலுத்த வேண்டும். இதற்கான படிவங்கள் அந்தந்தப் பகுதி உதவி வேளாண் அலுவலர்கள், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் கிடைக்கும்.

பிரிமியத் தொகை ஒரு ஏக்கருக்கு ரூ. 260, இதில் தமிழக அரசு சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 50 சத மானியமும் வழங்கப்படுகிறது. அதன்படி சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 117-மும், இதர விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 130-ம் பிரிமியமாக செலுத்த வேண்டும் என்றார் அவர்.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் சம்பா நெல் விளைச்சல் அமோகம்**

First Published : 26 Nov 2010 04:42:55 AM IST



காஞ்சிபுரம், நவ. 25: காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான சம்பா நெல் விளைச்சல் அமோகமாக உள்ளது. அதேபோல் விலையும் நெல், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.900-ல் இருந்து ரூ.1100
வரை விற்பனை செய்யப்படுகிறது.

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஆண்டுதோறும் 1,45,966 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது தொழிற்சாலைகள் பெருக்கம், ரியல் எஸ்டேட்
வியாபாரம் என பல ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்களில் உற்பத்தி குறைந்துள்ளன.

÷தற்போதும் 1 லட்சத்து 25 ஆயிரம் ஹெக்டேரில் விவசாயம் நடைபெற்று வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதில் சம்பா பருவத்தில் விவசாயிகள் 30-40 சதவீதம் நெல் விளைச்சல் செய்கின்றனர்.

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த சம்பா பருவத்தில் நெற்பயிர்கள் நன்றாக வளர்ந்துள்ளன. அரசு விற்பனைக் கூடங்களில் சன்னரகம் நெல், குவிண்டாலுக்கு ரூ.1100-ம், குண்டுரகம் ரூ.950-ல் இருந்து
ரூ.ஆயிரமும் விலை கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மழை நேரத்தில் அறுவடைக்கு காத்திருந்த நெற்பயிர்கள் மழையில் சிக்கி சேதமடைந்தன. ஆனாலும் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்கள் நன்றாக உள்ளன.

÷இது குறித்து இயற்கை விவசாயிகள் சங்கத்தின் தலைவர் அருங்குன்றம் தேவராஜிடம் கேட்டபோது:

"சம்பா பருவத்தில் மாவட்டத்தின் ஓர் ஆண்டுக்கான மொத்த நெல் உற்பத்தியில் 30 சதவீதம்தான் உற்பத்தியாகும். குறைந்த உற்பத்தி காரணமாக நெல் விலை நன்றாக உள்ளது. ÷இருந்தாலும் இந்த
நேரத்தில் கூட சில தனியார் நெல் விலையை குறைத்துதான் வாங்குகின்றனர். அரசு விற்பனைக் கூடங்களில் விற்பனையில் ஏற்படும் காலதாமதம், மறைமுகமாக ஒரு சிலர் கேட்கும் பணம், ஏற்கெனவே சில விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் விவசாயத்துக்கு முன் பணம் வாங்கிவிடுதல் ஆகிய காரணங்களால்தான் தனியாரிடம் செல்கின்றனர்.
÷அரசு விற்பனைக் கூடங்களில் இருக்கும் பிரச்னைகளை சரி செய்து, விவசாயத்துக்கு தடையில்லாமல் கடன் கிடைத்தால் தனியாரிடம் செல்லும் நிர்பந்தம் விவசாயிகளுக்கு ஏற்படாது. வரும் நவரை பருவத்தில் அதிக நெல் விளைச்சல் இருக்கும். அப்போது விலை சரியாமல் இருந்தால்தான் பெரும்பாலான விவசாயிகள் லாபம் அடைய முடியும். அதிக நெல் விளைச்சல் இருக்கும்போது பெரும்பாலும் விலையை குறைத்து விடுகின்றனர்' என்றார்.

தினமலர்

**மானிய விலையில் தானிய சேமிப்பு குதிர்கள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,00:13 IST

விருத்தாசலம் : விருத்தாசலத்தில் தானிய சேமிப்பு குதிர்கள் மானிய விலையில் கிடைக் கும் என வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து விருத்தாசலம் வேளாண்மை உதவி இயக்குனர் அரிதாஸ் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தானிய சேமிப்பு குதிர் மானிய விலையில் ஒரு டன் கொள்ளளவு 3,625 ரூபாய் மானியம் போக விவசாயி பங்கு தொகையும், 0.5 டன் கொள்ளளவு 2,500 ரூபாய் மானியம் போக 3,500 ரூபாய் மற்றும் பங்குதொகை செலுத்தி விவசாயிகள் வாங்கி பயன் பெறலாம். மேலும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிங்க் சல்பேட் 50 சதவீத மானிய விலையில் ஒரு கிலோ 19.20 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்படுகிறது. சிங்க் சல்பேட்டில் நெற்பயிருக்கு தேவைப்படும் துத்தநாகம் மற்றும் கந்தக சத்துள்ளது. ஜிப்சம் 50 சதவீத மானிய விலையில் 50 கிலோ மூட்டை 58.85 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்படுகிறது. விதை கிராம திட் டத்தின் கீழ் டி 9 ரக உளுந்து 50 சதவீத மானிய விலையில் கிலோ 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேற்கண்ட

பொருட் களை விருத்தாசலம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் பெற்று விவசாயிகள் பயனடையலாம். இவ் வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மஞ்சள் பயிரில் இலைக்கருகல் நோய் தாக்கத்தால் மகசூல் பாதிக்கும் அபாயம்**பதிவு செய்த நாள் :

நவம்பர் 26,2010,01:47 IST

ப.வேலூர்: ப.வேலூர் சுற்றுவட்டார கிராமப்புறங்களில் நடவு செய்யப்பட்ட மஞ்சள் பயிரில் இலைக்கருகல் நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் மகசூல் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. அதனால் சுற்றுவட்டார விவசாயிகள் பெருங்கவலையடைந்துள்ளனர். ப.வேலூர் அருகே கு.அய்யம்பாளையம் சுற்றுவட்டார கிராமப்புறத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த சில வாரங்களாக ப.வேலூர் சுற்றுவட்டாரத்தில் தொடர் மழைப்பொழிவு ஏற்பட்டு வருகிறது.

அம்மழைப்பொழிவால் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்ட விளைநிலங்களில் தண்ணீர் தேங்க ஆரம்பித்துள்ளது. அதனால் மஞ்சள் கிழங்கு அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதால், இலைக்கருகல் நோய் தாக்கமும் ஏற்பட்டுள்ளது. அதனால் மஞ்சள் மகசூல் பாதிக்கும் என்பதால் அப்பகுதி மஞ்சள் விவசாயிகள் பெருங் கவலையடைந்துள்ளனர். இந்நோய் தாக்கம் ஜேடர்பாளையம், ஆனங்கூர், பிலிக்கல்பாளையம் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமப்புறங்களில் நடவு செய்யப்பட்ட மஞ்சள் பயிர்களில் காணப்படுகிறது.

இது குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர் ரவி கூறியதாவது: மஞ்சள் பயிர்களுக்கு விளைநிலங்களில் தண்ணீர் தேங்கக் கூடாது. அவ்வாறு தேங்குவதால் கிழங்கு அழுகல், இலைக்கருல் நோய் ஏற்படுகிறது. நோய் தாக்கப்பட்ட பயிர்களை உடனடியாக அகற்றி எரித்து விட வேண்டும். அவ்வாறு எரிக்கவில்லையெனில் நோய் மற்ற பயிர்களுக்கும் பரவ வாய்ப்புள்ளது.

**ரப்பர் விலை உயர்வை கண்டித்து ரீட்ரேடிங் கம்பெனிகள் "ஸ்டிரைக்'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,02:21 IST

சேலம்: டயர் ரீட்ரெடிங் தொழிலுக்கு தேவையான ரப்பர் உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலை உயர்வை கண்டித்து, நேற்று சேலத்தில் ரப்பர் ரீட்ரேடிங் கம்பெனிகள் ஸ்டிரைக்கில் ஈடுபட்டன. டயர் ரீட்ரேடிங் கம்பெனிகள் சங்க துணை செயலாளர் ராஜு கூறியதாவது: சேலம், நாமக்கல்

மாவட்டங்களில் லாரி பாடி பில்டிங், டயர் ரீட்ரேடிங், பெயிண்டிங், கண்ணாடி வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். சேலம், நாமக்கல் மாவட்டங்களில் மட்டும் 80க்கும் மேற்பட்ட டயர் ரீட்ரேடிங் கம்பெனிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த கம்பெனிகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். உலக சந்தையில் ரப்பர், பெட்ரோலிய பொருட்கள் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது. டயர் ரீட்ரேடிங் தொழிலுக்கு பயன் படுத்தப்படும் ரப்பர் விலையும் வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது.

ரீட்ரேட் ரப்பர் தயாரிக்க பயன்படும் இயற்கை ரப்பர் கடந்த ஆண்டு கிலோ 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது, அதே ரப்பர் தற்போது கிலோ 218 ரூபாய்க்கு விற்கிறது. இந்த விலை உயர்வால் டயர் ரீட்ரேடிங் தொழில் கடும் பாதிப்படைந்துள்ளது. பெட்ரோல், டீஸல் போல இயற்கை ரப்பருக்கும் அரசு நிலையான விலை நிர்ணயம் செய்ய வேண்டும். மின்சார தட்டுப்பாடு காரணமாக தொடர்ந்து தொழில் நசிந்து வருகிறது. இந்த தொழிலை காக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டம் நடத்தப்பட்டது.

**வெற்றிலை விலை வரலாறு காணாத சரிவு விவசாயிகள் பெருங்கவலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,01:44 IST

ப.வேலூர்: தொடர் மழைப்பொழிவால் ப.வேலூர் சுற்றுவட்டார கிராமப்புறங்களில் நடவு செய்யப்பட்டுள்ள வெற்றிலையில் இலைப்புள்ளி நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இது உட்பட சீஸன் இல்லாதது போன்ற காரணங்களினால் வெற்றிலை விலை பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. சுமைக்கு 500 ரூபாய் வீதம் விலைச்சரிவு ஏற்பட்டிருப்பது வெற்றிலை விவசாயிகளை கவலையடைச் செய்துள்ளது. ப.வேலூர் அதன் சுற்றுவட்டார கிராமங்களான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், குச்சிபாளையம் உள்ளிட்ட காவிரி ஆற்றுப்படுகையில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. கற்பூரம், வெள்ளை வெற்றிலை இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இளம் பயிர், முதியம் பயிர் என இரு வகைகளாக வெற்றிலை அறுவடை செய்யப்பட்டு ப.வேலூரில் செயல்படும் வெற்றிலை ஏல மண்டிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. 104 கவுளிகள் கொண்ட வெற்றிலை கட்டுகள் ஒரு சுமையாக கட்டி விற்பனைக்கு கொண்டு செல்லப்படும். அவை அங்கிருந்து தமிழகம் முழுவதும் மட்டுமின்றி வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. ப.வேலூர் பகுதியில் விளையும் வெற்றிலைக்கு மக்கள் மத்தியில் எப்போதும் தனி மவுசு உண்டு என்பதால், அவற்றை வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கிச் செல்வர்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன் கற்பூரம் மற்றும் வெள்ளை வெற்றிலை இளம் பயிர் ஒரு சுமை 1,000 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. அதுபோல் முதியம் பயிர் வெற்றிலை 700 ரூபாய் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில், சீஸன் இல்லாதது உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் வெற்றிலை விலை கடும் இறக்கம் கண்டுள்ளது.

கடந்த வாரம் 1,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு சுமை இளம்பயிர் வெற்றிலை 350 முதல் 400 ரூபாய் என, 600 ரூபாய் விலை இறக்கம் அடைந்துள்ளது. அதுபோல் முதியம் பயிர் வெற்றிலை 250 முதல் 350 ரூபாய் என, 400 ரூபாய் வரை விலையிறக்கம் அடைந்துள்ளது. வரலாறு காணாத அளவில் வெற்றிலை விலை இறக்கம் அடைந்திருப்பது ப.வேலூர் அதன் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த வெற்றிலை விவசாயிகள் கவலையடையச் செய்துள்ளது.

இது குறித்து வெற்றிலை விவசாயிகள் சிலர் கூறுகையில், ""மழை சீஸன் என்பதால் வெற்றிலையில் இலைப்புள்ளி நோய் தாக்கம் ஏற்பட்டுளளது. தவிர, தேங்கும் மழைநீரால் வேர் அழுகல் நோய் பாதிப்பும் ஏற்படுகிறது. இவை உட்பட சீஸன் இல்லாததும் வெற்றிலை விலை இறக்கத்துக்கு முக்கிய காரணமாகும். விலை இறக்கம் காரணமாக வெற்றிலை கொடிக்கால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

""வெற்றிலை கொடிக்கால் நடவு செய்து 8 மாதத்தில் முதல் அறுவடை செய்யலாம். இரண்டு ஆண்டு வரை கொடிக்காலில் அறுவை செய்யலாம். பத்தாயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் வெற்றிலை விவசாயம் பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம் 50 ஆயிரம் குடும்பத்தினர் நேரடியாகவும், மறைமுகமாகவும் பிழைப்பு நடத்தி வருகின்றனர். வெற்றிலை விலைச்சரிவு காரணமாக, விவசாயிகள் மட்டுமின்றி அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்," என்றனர்.

**தொடர் மழையால் கத்தரிக்காய் வரத்து சரிவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,01:36 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழையால், கத்தரிக்காய் விலை உயர்ந்துள்ளது ஒன்றரை மாதத்துக்கு முன் கத்தரிக்காய் கிலோ 40 ரூபாய்க்கு விற்றது. விளைச்சல் அதிகரித்ததால் 20 நாட்களுக்கு முன் ஒரு கிலோ 20 ரூபாயாக சரிந்தது. மக்களும் ஆர்வத்துடன் கத்தரிக்காய் வாங்கி வந்தனர். தொடர்ந்து பத்து நாட்களாக பெய்த மழையால் கத்தரிக்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் நசியனூர், செம்மாம்பாளையம், பவானி, அந்தியூர்,

மொடக்குறிச்சி ஆகிய இடங்களில் கத்தரிக்காய் பயிராகிறது. லாபம் தரும் பயிர்களில் கத்தரிக்காய் முக்கியமானது. பயிரிட்ட இரண்டாவது மாதத்தில் அறுவடைக்கு வந்துவிடும்.

தொடர்ந்து 290 நாட்களுக்கு காய் உற்பத்தியாகும். ஏக்கருக்கு ஒவ்வொரு வாரமும் 250 கிலோ உற்பத்தி கிடைக்கும். ஒன்றரை மாதத்துக்கு முன் கத்தரிக்காய் சீஸன் களை கட்டியது; விளைச்சல் அதிகரித்தது; விலை குறைந்து காணப்பட்டது. தோட்டங்களில் இருந்து ஒரு கிலோ கத்தரிக்காய் எட்டு ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். மார்க்கெட்டில் 20 ரூபாய்க்கு விற்றனர். சமீபத்தில் பெய்த மழையால், செடிகளில் இருந்து பிஞ்சு காய்கள் உதிர்ந்து விட்டன. காய்கள் உற்பத்தி குறைந்துவிட்டது. வயலில் நீர் தேங்கி, விளைச்சல் சரிவு ஏற்பட்டது. தோட்டத்திலேயே கத்தரிக்காய் 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மார்க்கெட்டில் 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.மற்றும் பணியாளர்கள் நலவாரிய அட்டைகளை கலால் உதவி ஆணையர் சிவக்குமார் வழங்கினார்.

**"அலங்கார மீன்' வளர்ப்பில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,00:00 IST



புதுச்சேரி: மீன் வளம் பெருக்க தேங்காய் திட்டில் கழிமுகப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இரண்டு ஏக்கர் பரப்பளவில், நான்கு நன்னீர் குளங்கள் உள்ளன. இக்குளங்களில் **"கோய்கார்ப்'** என்ற அலங்கார மீன்கள் வளர்க்கப்படுகின்றன. குஞ்சுகளாக விடப்பட்ட மீன்கள் தற்போது நன்கு வளர்ந்து, முழு வளர்ச்சி பெற்றுள்ளன. அழகாக வலம் வரும் அலங்கார மீன்கள் பார்ப்பவர்களின் கண்களை கவர்கின்றன. பொன் நிறத்தில் காணப்படும் இம்மீன்கள், பொட்டானிக்கல் கார்டனில் அமைந்துள்ள மீன்வளத்துறையின் மீன் அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட உள்ளன.சோதனை முறையில் வளர்க்கப்பட்டு வரும் இத்திட்டம் வெற்றி பெற்றால், பெரியளவில் அலங்கார மீன்கள் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

**"போன்சாய்'க்கு வரவேற்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,00:00 IST



மதுரை: போன்சாய் மர வளர்ப்பு முறை, தற்போது அடுக்குமாடி குடியிருப்புக்கள் அதிகமாக கொண்ட நகரங்களில் பிரபலமாகி வருகிறது. கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகளுக்கு முன்பு, சீனாவில் தோன்றிய போன்சாய் முறையில், பெரிய மரங்களும், செடிகளும் கூட வீடுகளில் வளர்க்கப்படுகின்றன. இம்முறையில் வளர்க்கப்படும் மரங்களின் தண்டுபாகம் தடிமனாகவும், கீழ்புறத்தில் அதிகமாகவும், மேற்புறத்தில் குறைந்ததாகவும் கிளைகள் கொண்டதாக இருக்க வேண்டும். கிளைகளுக்கு நடுவே இடைவெளி இருப்பது அவசியம். காய்ந்த இலைகளை அவ்வப்போது அகற்ற வேண்டும். காலை, மாலை வேளைகளில் நீர் ஊற்ற வேண்டும்.

ஆனால், தண்ணீர் தேங்க கூடாது. மாதத்திற்கு ஒருமுறை தண்ணீரில் கரையும் உரங்களை இடலாம். மரங்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்த, இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தொட்டியை மாற்ற வேண்டும். அப்போது, தடிமனான வேரை வெட்டிவிட வேண்டும். அலுமினிய ஒயர்களை கொண்டு விரும்பிய வடிவத்திற்கு கிளைகளை வளைக்கலாம். வீடுகளில், எல்லா தட்ப, வெப்ப நிலைகளிலும் போன்சாய் மரங்கள் வளரும். "ஆல், அரசு, வேம்பு, புளி, எலுமிச்சை, சப்போட்டா, மூங்கில், நாவல், சவுக்கு, கொன்றை போன்றவை போன்சாய் முறையில் வளர்க்க ஏற்றவை. இவற்றை முறையாக வளர்த்தால், 100 ஆண்டுகள் வரை பசுமை மாறாது' என்கிறார் **மதுரை தோட்டக்கலைத் துறை பேராசிரியை பத்மபிரியா.**

**நெல் நாற்றுகள் பாதிப்பு விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,01:24 IST

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம் சுற்றி பெய்து வரும் தொடர்மழையில் நெல் நாற்று தண்ணீரில் மூழ்கியது.வேலாயுதம்பாளையம், நொய்யல் சுற்றுப்பகுதியில் 2,000 ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது இங்கு பொன்னி, ஐ.ஆர்., 20, சம்பா பொன்னி ரக நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. ஐப்பசி இறுதியிலும், கார்த்திகை முதல் வாரத்திலும் இப்பகுதியில் நெல் நாற்று நடவு செய்யப்பட்டது.நாற்றுகள் பதியம் செய்து ஒரு மாதம் காலம் முடிந்த நிலையில், தற்போது நாற்று பிரித்து நடவு செய்யப்படுகிறது. பொங்கலுக்கு அறுவடை செய்யும் வகையில், பயிர் தயாராகும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர்.கடந்த சில நாட்களாக பெய்யும் கனமழையால், நடவு செய்யப்பட்ட நெல் நாற்று அனைத்தும் தற்போது மழை நீரில் முழ்கி அழுகும் நிலையில் உள்ளது. இதனால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்

**கொப்பரை வரத்து உயர்வு ரூ.17 லட்சத்துக்கு ஏல விற்பனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,01:37 IST

வெள்ளகோவில்: வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரை தேங்காய் வரத்து அதிகரித்தது. 17 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒவ்வொரு வாரமும் புதன் கிழமை கொப்பரை, வியாழக்கிழமை சூரியகாந்தி, ஞாயிறன்று நிலக்கடலை வர்த்தகம் நடக்கிறது. வெள்ளகோவில், மங்கலப்பட்டி மற்றும் கரூர் சுற்றுவட்டார விவசாயிகள் விளை பொருட்களை இங்கு கொண்டு வருகின்றனர். நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், 657 மூட்டை கொப்பரை வரத்தானது. கிலோவுக்கு அதிகபட்சமாக 54.95 ரூபாய், குறைந்தபட்சமாக 38.95 ரூபாய் விலை கிடைத்தது. 16 லட்சத்து 70 ஆயிரத்து 81 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. விற்பனைக்கூட அலுவலர் கூறுகையில், ""சென்ற வாரம் 460 மூட்டை கொப்பரை வரத்தானது. மழைக்காலம் என்பதால் அதிக விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் வீடுகளில் இருப்பு வைத்திருந்த கொப்பரையையும் கொண்டு வந்து விட்டனர். சென்ற வாரத்தை விட ஆறு லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் அதிகமாக வர்த்தம் நடந்தது," என்றார்.

பொங்கல் பைக்கு கொள்முதல் பாசி பருப்பு விலை ரூ.15 உயர்வு

பதிவு செய்த நாள் : நவம்பர் 26,2010,02:24 IST

சேலம்: தமிழக அரசு பொங்கல் பைகளில் வழங்குவதற்காக பாசி பருப்பு கொள்முதல் செய்வதால், வெளிமார்க்கெட்டில் பாசி பருப்பு விலை கிலோவுக்கு 15 ரூபாய் வரை திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. பொங்கல் பைகளில் வழங்குவதற்காக தமிழக அரசு கடந்த ஆண்டு 100 டன் பாசிப் பருப்பு கொள்முதல் செய்தது. நடப்பாண்டு கூடுதலாக 20 டன் சேர்த்து மொத்தம் 120 டன் பாசிப் பருப்பு கொள்முதல் செய்துள்ளது. மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், உத்திரபிரதேசம், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது இம்மாநிலங்களில் பெய்து வரும் மழை காரணமாக பாசிப் பயிறு அறுவடை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், ஆலைகளில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டிருந்த பாசிப்பருப்பு வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையால் பாசிப் பருப்பு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிமார்க்கெட்டில் வியாபாரிகள் இருப்பு வைத்திருந்த பருப்பை விற்பனை செய்து வந்தனர்.

இந்நிலையில், பொங்கல் பைக்கு தேவையான பாசிப் பருப்பு தமிழகத்திலேயே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டதால், பாசிப் பருப்புக்கு தமிழகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் வரை பாசிப் பருப்பு குவிண்டால் 6,500 ரூபாய்க்கு விற்றது நேற்று திடீரென 1,200 ரூபாய் அதிகரித்து குவிண்டால் 7,700 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. மொத்த விலையில் உயர்வு ஏற்பட்தால், சில்லரை விலையில் கிலோவுக்கு 15 ரூபாய் அதிகரித்து நேற்று கிலோ 85 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

இது குறித்து சேலம் பருப்பு வியாபாரி சீனிவாசன் கூறியதாவது: தமிழகத்தில் மட்டுமின்றி வடமாநிலங்களில் தொடர் மழை பெய்து வருவதால்  பருப்பு வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு பாசிப் பருப்பை மொத்தமாக கொள்முதல் செய்துள்ளதால், அதன் விலை திடீரென உயர்ந்துள்ளது. வியாபாரிகள் வெளி மார்க்கெட்டில் பாசிப் பருப்பின் விலையை மேலும் அதிகரிக்கும் வகையில் விற்பனையை தற்காலிகமாக நிறுத்தி உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**கல்ராயன் மலை கிராமங்களில் "விளாம்பழம்' சீஸன் துவக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,02:46 IST

வாழப்பாடி: வாழப்பாடி அடுத்த கல்ராயன் மலை கிராமங்களில் "விளாம்பழம்' சீஸன் துவங்கியுள்ளது. இந்த ஆண்டு விளாம்பழம் விளைச்சல் மிகுதியால், வரத்து அதிகரித்துள்ளது.வாழப்பாடி அடுத்த 30 வது கி.மீ.,தூரத்தில் சேலம், விழுப்புரம், தர்மபுரி மாவட்டங்களை இணைக்கும் வகையில் பல நூறு சதுர மைல் பரப்பளவில் கல்ராயன் மலைத்தொடர் பரந்து காணப்படுகிறது.சேலம் மாவட்டத்தில் பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், தலைவாசல் பஞ்சாயத்து யூனியன் மற்றும் விழுப்புரம் மற்றும் தர்மபுரி மாவட்ட எல்லையில் 200க்கும் மேற்பட்ட மலை கிராமங்கள் அமைந்துள்ளன.

வாழப்பாடி பகுதியில் கல்ராயன்மலை மட்டுமின்றி, அறுநூற்றுமலை, நெய்யமலை, சந்துமலை, ஜம்பூத்துமலை பகுதிகளிலும் ஏராளமான மலை கிராமங்கள் அமைந்துள்ளன.மலைப்பகுதியில் அரசின் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளிலும், புதிதாக காடு வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மலையோர கிராமங்களிலும், தரிசு நிலங்களிலும் விளாமரங்கள் நிறைந்துள்ளன.வனப்பகுதியிலும், மலை கிராமங்களிலும் இயற்கை சூழலில் வளரும் விளாமரங்களில் கிடைக்கும் பழங்களில் இனிப்பு கலந்த புளிப்புச்சுவை நிறைந்திருக்கும். அதனால், ஆண்டுக்கு ஒரு முறை அறுவடையாகும் விளாம்பழத்தை, கிராமப்புற மக்கள் மட்டுமின்றி நகர்ப்புற வாசிகளும் விரும்பி சுவைக்கின்றனர்.தற்போது விளாம்பழம் அறுவடை சீஸன் துவங்கியதால், வாழப்பாடியை சுற்றியுள்ள வனப்பகுதிகள் மற்றும் கிராமப்புறங்களில் மரங்களில் கொத்து கொத்தாக விளாம்பழங்கள் கனிந்து தொங்குகின்றன.வனத்துறையிடம் அனுமதி பெற்றும், விவசாயிகளிடம் குத்தகைக்கு எடுத்தும் பழத்தை அறுவடை செய்து வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர். விளைச்சல் மிகுந்ததால், விற்பனைக்கு வரத்தும் அதிகரித்துள்ளது.

**விவசாயிகளுக்கு வேளாண் கருவி வழங்கல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,03:13 IST

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விழாவில், விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டன. வேளாண் பொறியியல் துறை மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மற்றும் வேளாண் இயத்திரமாக்கல் திட்டத்தின் கீழ் விவசாயிகள் மூன்று பேருக்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மானியத்தில் டிராக்டர்கள், 3 லட்சத்து 15

ஆயிரம் ரூபாய் மானியத்தில் ஏழு பேருக்குபவர் டில்லர்கள், 60,000 ரூபாய் மானியத்தில் இருவருக்கு களை எடுக்கும் இயந்திரம், மூன்று பேருக்கு 12,900 ரூபாய் மானியத்தில் தீவனப் புல் வெட்டும் இயந்திரம், இருவருக்கு 20,000 ரூபாய் மானியத்தில் கலப்பை ஆகியவற்றை கலெக்டர் ஆனந்தகுமார் வழங்கினார். மொத்தம் 20 விவசாயிகளுக்கு 26 லட்சத்து 12 ஆயிரத்து 123 ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களும், 5 லட்சத்து 87 ஆயிரத்து 142 ரூபாய் மானியமும் வழங்கப்பட்டது.

**மழையால் பொறியல் தட்டை செடிகளில் புழுதாக்குதல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,01:58 IST

கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு பகுதிகளில் பெய்து வரும் புயல் மழை காரணமாக பொறியல் தட்டை செடிகளில் புழுத்தாக்குதல் ஏற்பட்டுள்ளது. கிணத்துக்கடவு மற்றும் சுற்றியுள்ள வடபுதூர், சிங்கையன்புதூர், கல்லாபுரம், சொக்கனூர் உட்பட பல்வேறு கிராமங்களில் பொறியல் தட்டை பயறு 50 எக்டர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இச்சாகுபடி ஆண்டு முழுவதும் நடக்கிறது. இதற்கு செலவுதொகையும் குறைவு என்பதால், பெரும்பாலான விவசாயிகள் தட்டை பயறு சாகுபடியை துவங்கியுள்ளனர். ஆரம்ப கட்டத்தில் இருந்து காய்ப்புக்கு வந்து, பொறியல் தட்டை பயறு பறிக்கும் வரை மூன்றாயிரம் ரூபாய் வரை செலவாகிறது. மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும்.

இச்சாகுபடி செய்வதற்கு, அதிகப்படியான கூலி தொழிலாளர்களும் தேவையில்லை. இதனால், விவசாயிகள் ஆண்டுதோறும் நிலத்தின் ஒரு பகுதியில் பொறியல் தட்டை பயறு சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது, நல்ல காய்ப்புக்கு வந்துள்ளது. இதில் இருந்து இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 200 கிலோ பொறியல் தட்டைபயறு கிடைக்கிறது. கடந்த ஒரு வாரமாக இப்பகுதிகளில் புயல் மழை பெய்தது. இதில், பொறியல் தட்டை பயறு செடிகள் எவ்வித பாதிப்புக்குள்ளாகவில்லை. ஆனால், மழையின் ஈரப்பதம் காரணமாக செடிகளில் புழுத்தாக்குதல் அதிகமாக உள்ளது.

இதனால், இது கறுப்பாக மாறியுள்ளது. இரண்டு நாட்களுக்கு ஒரு முறை பறிக்கப்படும் பொறியல் தட்டைபயறில், பாதிக்கப்பட்டவையை விவசாயிகள் தனியாக பிரித்து எடுத்து விட்டு, நல்ல நிலையில் உள்ள பயறை கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட் கொண்டு வந்தனர். அங்கு, நேற்று நடந்த ஏலத்தில், ஒரு கிலோ பொறியில் தட்டை பயறு ரூ.16க்கு ஏலம் சென்றது. கேரளாவில் இதற்கு நல்ல கிராக்கி இருப்பதால், இப்பகுதியில் இருந்து வரும் பொறியல் தட்டை பயறுக்கு கூடுதல் விலை கிடைத்துள்ளது.

**நிலக்கடலை விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,21:49 IST

மானாமதுரை : மானாமதுரையில் நிலக்கடலை விளைச்சல் அமோகமாக உள்ளது. ஆனால் இருப்பு வைக்க வழியின்றி, குறைந்த விலைக்கு விற்கும் நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இப்பயிருக்கு செம்மண் ஏற்றது; இதனால் ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மாவட்ட எல்லை கிராம மானாவாரி நிலங்களில் பெருமளவில் விளைகிறது. மானாமதுரையில் டி.எல்.வி.,- 7 ரக கடலை அதிகளவில் பயிரிடப்பட்டு, தற்போது அறுவடை பருவத்தில் உள்ளன. இந்தாண்டு பருவ மழை அமோகத்தால், விளைச்சல் அதிகரித்துள்ளது. ஆனால், தொடர் மழையால் அறுவடை செய்த கடலையை இருப்பு வைக்க வழியின்றி குறைந்த விலைக்கு விற்று வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயி முத்து கூறுகையில், ""வழக்கமாக டிசம்பர் இறுதியில் தான் அறுவடைக்கு தயாராகும். இந்தாண்டு நல்ல மழை பெய்ததால் ஜூலையில் பயிரிட்டோம்; மகசூல் அதிகரித்துள்ளது. அறுவடை நேரமான தற்போதும் மழை பெய்து ஈரப்பதம் அதிகம் இருப்பதால் கடலையை உலர வைக்க முடியவில்லை. கடலையில் எண்ணெய் சத்து, சுவை குறையும்; பூஞ்சாணம் பிடிக்கும். இதனால் குறைந்த விலைக்கு விற்கிறோம். கடந்த ஆண்டு 35 கிலோ மூடை 1,500 ரூபாய் விலை போனது; தற்போது 1,000 ரூபாய்க்கு தான் கேட்கின்றனர்," என்றார்.

## உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 10.15%–ஆக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் நவம்பர் 13–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 10.15 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில் 10.30 சதவீதமாக இருந்தது.


கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், சென்ற ஆண்டின் இதே வாரத்தை விட குறிப்பிட்ட சில உணவு பொருள்களின் விலை மிகவும் குறைந்திருந்தது. குறிப்பாக, பருப்பு வகைகள் மற்றும் காய்கறிகள் விலை முறையே 7.58 சதவீதம் மற்றும் 3.76 சதவீதம் குறைந்துள்ளது. உருளைக்கிழங்கின் விலை 48.70 சதவீதம் சரிவடைந்திருந்தது.

அதேசமயம் முட்டை, இறைச்சி, மீன்கள் போன்றவற்றின் விலை சுமார் 23 சதவீதம் உயர்ந்திருந்தது. வெங்காயத்தின் விலை சென்ற ஆண்டை விட, நவம்பர் 13–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 17.03 சதவீதம் அதிகரித்திருந்தது.

பழங்கள் மற்றும் காய்கறிகளின் விலை முறையே 21.85 சதவீதம் மற்றும் 16.90 சதவீதம் உயர்ந்திருந்தது.

குறிப்பிட்ட சில உணவு பொருள்களின் விலை குறைந்துள்ளதையடுத்து நடப்பு ஆண்டின் இறுதியில் நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்க விகிதம், அரசின் மதிப்பீட்டை ஒட்டி அதாவது சுமார் 6 சதவீத அளவிற்கு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்திய அலங்கார மீன்களுக்கு தேவைப்பாடு மீண்டும் அதிகரிப்பு



சுதானுகா கோசல்

கொல்கத்தா

வெளிநாடுகளில் இந்தியாவின் அலங்கார வண்ண மீன்களுக்கான தேவைப்பாடு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனையடுத்து இத்துறையைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். குறிப்பாக நாட்டின் வடகிழக்குப் பகுதியில் வண்ண மீன் ஏற்றுமதி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இந்தியாவின் மொத்த வண்ண மீன்கள் ஏற்றுமதியில் வடகிழக்கு மாநிலங்களின் பங்களிப்பு 85 சதவீதமாக உள்ளது.

600 வகை மீன்கள்

இந்தியாவில் உள்ள சுமார் 2,118 வகையான் மீன் இனங்களில் 600 இனங்கள் அலங்கார வண்ண மீன் வகைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் சுமார் 300 இனங்கள் வடகிழக்கு மாநிலங்களில்தான் வளர்க்கப்படுகின்றன.

சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் அலங்கார மீன்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கைகளின் மொத்த மதிப்பு 900 கோடி டாலர் ஆகும். அமெரிக்கா வண்ண மீன்கள் இறக்குமதியில் முதலிடத்தில் உள்ளது. அடுத்தபடியாக ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பான் அதிக அளவில் இறக்குமதி செய்து வருகின்றன. உலகின் மொத்த வண்ண மீன்கள் ஏற்றுமதியில் ஆசிய நாடுகளின் பங்களிப்பு 50 சதவீதமாக உள்ளது. குறிப்பாக சிங்கப்பூர் மிகப் பெரிய ஏற்றுமதியாளராக உள்ளது.

வருவாய்

இதுகுறித்து வண்ண மீன்கள் வர்த்தகரான, கவுஹாத்தியைச் சேர்ந்த சின்மாய் கடாகி கூறும்போது, “இந்த வர்த்தகத்தில் வருவாய் அதிகமாக உள்ளது. இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தரமான வண்ண மீன்களுக்கு நல்ல விலை கொடுக்கத் தயாராக உள்ளன என்றாலும் கவுஹாத்தியில் ஏற்றுமதிக்கான கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் நாங்கள் கொல்கத்தாவில் இருந்துதான் ஏற்றுமதி மேற்கொள்ள வேண்டியுள்ளது” என்று தெரிவித்தார்.

வடகிழக்குப் பகுதியில் வண்ண மீன்கள் வர்த்தக மேம்பாட்டு அமைப்பின் தலைவரான கடாகி, இத்துறையை அமைப்பு சார்ந்த பிரிவின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

வட கிழக்கு மாநிலங்கள்

நன்னீரில் வளர்க்கப்படும் மீன் வகைகளில் வடகிழக்கு மாநிலங்களின் பங்களிப்பு 33 சதவீதமாக உள்ளது. அசாம் மாநிலத்தில் அதிகபட்சமாக 217 வகைகள் வளர்க்கப்படுகின்றன. அருணாச்சல பிரதேசத்தில் 167 மீன் வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேகாலயா (165 வகை), திரிபுரா (134 வகை), மணிப்பூர் (121 வகை), நாகாலாந்து (68 வகை), மிசோராம் (48 வகை), சிக்கிம் (29 வகை) ஆகிய மாநிலங்களில் பல வகையான வண்ண மீன்கள் வளர்க்கப்படுகின்றன.

வண்ண மீன் வளர்ப்பு மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் நம் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ஏற்றுமதியாளர்களுக்கு பல உதவிகளை அளித்து வருகிறது.

## குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு ரூ.6 வரை விலை உயர்வு

குன்னூர், நவ.26–

குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு ரூ.6 வரை விலை உயர்வு ஏற்பட்டது.

டீசர்வ் ஏலம்

நீலகிரி மாவட்டத்தில் 14 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் உள்ளன. இந்த தேயிலை தொழிற்சாலை களில் உற்பத்தியாகும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள

இன்கோசர்வ் வளாகத்தில் அமைந்துள்ள டீசர்வ் ஏல மையத்தில் வாரந்தோறும் புதன்கிழமை ஏலம் விடப் படுகிறது.

இந்த வாரத்துக்கான தேயிலை தூள் ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 6 லட்சத்து 61 ஆயிரத்து 641 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 3 லட்சத்து 78 ஆயிரத்து 685 கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 82 ஆயிரத்து 956 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

விலை உயர்வு

ஏலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்தனர். இதனால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் ரூ.4 முதல் ரூ.6 வரை விலை உயர்வு இருந்தது. தேயிலை தூளுக்கு விலை உயர்வு இருந்ததால், ஏலம் சுறு, சுறுப்பாக நடைபெற்றது.

தேயிலை தூளின் சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.48 முதல் ரூ.52 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.65–ல் இருந்து ரூ.70 வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.55 முதல் ரூ.60 வரையிலும் விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.63 முதல் ரூ.70 வரையிலும் ஏலம் சென்றது. கடந்த சில வாரங் களாக ஏல மையத்தில் தேயிலை தூளின் குறைந்த பட்ச விலையாக ரூ.40 இருந்து வந்தது. ஆனால் இந்த ஏலத்தில் தேயிலை தூளின் குறைந்தபட்ச விலையாக ரூ.48க்கு ஏலம் சென்றது. தேயிலை தூளுக்கு விலை ஏற்றம் இருந்து வருவதால் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளுக்கு பச்சை தேயிலை வழங்கும் விவசாயி களின் மத்தியில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தனியார் தேயிலை தொழிற் சாலைகள் உற்பத்தி செய்து, விற்பனை செய்யும் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு விலை குறைவு ஏற்பட்டு, தேயிலை தூள் தேக்கம் அடைந்து வருகிறது.

டீசர்வ் ஏல மையத்தில் தேயிலை தூளின் விலை அதிகரித்து வருவதால் ஒரு சில தனியார் தொழிற் சாலைகளின் தேயிலை தூளும் இந்த ஏலத்துக்காக டீசர்வ் ஏல மையத்துக்கு கொண்டு வரப்பட்டன என்பது குறிப் பிடத்தக்கது ஆகும்.